| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திருமதி. த. ரத்னா, இ.ஆ.ப.,<br>இயக்குநர்,<br>சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை இயக்குநகரம்,<br>பனகல் மாளிகை, 2வது தளம்,<br>சைதாப்பேட்டை, சென்னை – 15 | மாவட்ட சமூக நல அலுவலர்,<br>அனைத்து மாவட்டம் |

ந.க.எண்: 23100/ மாபெவமை/2021

நாள்: 06.09.2021

அம்மையீர்,

பொருள் : சமூக நலன் (ம) மகளிர் உரிமைத் துறை – மாநில பெண்கள் வள மையம் – பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமையிலிருந்து பாதுகாக்கும், சட்டம்–2013 (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) – மாவட்ட அளவிலான உள்ளூர் குழுவினை மறுசீரமைப்பு செய்தல் – 10க்கும் மேற்பட்ட பணியாளர்களை கொண்ட அனைத்து அரசு மற்றும் தனியார் பணியிடங்களில் உள்ளக குழு அமைத்தலை உறுதி செய்வது தொடர்பாக – அறிவுரைகள் அனுப்புதல் – – சார்பு.

பார்வை :

1. பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமையிலிருந்து பாதுகாக்கும், சட்டம்–2013 (ம) திருத்தப்பட்ட சட்டம் – 2019.
2. அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுப்பப்பட்ட இவ்வலுவலக நேர்முக கடித எண்: 58645/WW-2(1)/2013, நாள்: 08.09.2015.
3. மாவட்ட சமூக நல அலுவலர்களிடம் இருந்து பெறப்பட்ட உள்ளூர் குழு (LC) மற்றும் உள்ளக குழு (IC)அறிக்கைகள்.
4. மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட சட்டங்கள் தொடர்பான இணைய தள பயிற்சி நாள்: 04.08.2021

**********

பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமையிலிருந்து பாதுகாக்கும், சட்டம்–2013 (தடுப்பு, விலக்கு மற்றும் தீர்வு) சட்டத்தினை, மாநில அளவில் சமூக நலன் (ம) மகளிர் உரிமை துறை செயல்படுத்தி வருகிறது. இச்சட்டத்தின் படி பணிபுரியும் இடங்களில் பெண்களை பாலியல் சீண்டல்களிருந்து பாதுகாக்க அனைத்து அரசு மற்றும் தனியார் பணியிடங்களில் பாதுகாப்பு குழுக்களை அமைத்திட வேண்டும்.

<u>உள்ளூர் (ம) உள்ளக குழுக்கள்</u>

அதன்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட அதிகாரி (மாவட்ட ஆட்சியர்/ மாவட்ட நீதிபதி/ கூடுதல் மாவட்ட நீதிபதி/ துணை மாவட்ட ஆட்சியர்) அந்தந்த மாவட்டங்களில் 5 நபர்கள் கொண்ட ஒரு உள்ளூர் குழுவினை அமைக்க வேண்டும்.

அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் 10க்கும் மேற்பட்ட ஆண், பெண் இரு பாலரும் பணிபுரியும் பபணியாளர்கள் உள்ள அனைத்து பணி இடங்களில் பாலியல் வன்கொடுமையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டத்தின் படி உள்ளக குழு அமைத்திட வேண்டும்.

பணியிடங்கள்:

பணியிடங்களில் மாவட்ட ஆட்சியரின் கீழ் இயங்கும் அரசு துறை அலுவலகங்கள்/ நிறுவனங்கள், தனியார் தொழிற்சாலைகள், தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள், மருத்துவமனைகள், பள்ளிகள், கல்லூரிகள், சிறு குறு நிறுவனங்கள் மற்றும் அமைப்பு சாரா பணியிடங்கள் முதலான அனைத்து பணி இடங்களிலும், 10–க்கும் மேற்பட்ட நபர்கள் பணிபுரியும் பட்சத்தில் அங்கு உள்ளக குழு அமைத்திட வேண்டும்.

## குழு உறுப்பினர் நியமனங்கள்

| வ. எண் | நியமன விவரம் | உள்ளூர் குழு (LCC) | உள்ளக குழு (ICC) |
|---|---|---|---|
| 1. | உறுப்பினர் – 1 | பெண்களுக்கான சமூக பணியில் ஈடுபட்டுள்ள தகுதி வாய்ந்த பெண் ஒருவரை தலைமை பொறுப்பில் நியமிக்கப்பட வேண்டும். | பணிபுரியும் இடத்தில் மூத்த பெண் பணியாளரை தலைவராக நியமனம் செய்ய வேண்டும், இல்லாத பட்சத்தில் பணிபுரியும் அலுவலகம்/ பிற துறைகள்/ பிற கிளைகள்/ பிற பணியிடங்களில் இருந்து நியமிக்கலாம். |
| 2. | உறுப்பினர் – 2 | வட்டாரம் (அ) தாலுக்கா (அ) வார்டு (அ) நகராட்சி பிரதிநிதித்துவம் சார்ந்த ஒரு பகுதியில் இருந்து ஒரு பெண் உறுப்பினர். | பெண்கள் சார்ந்த பிரச்சனைகளை முன்னெடுத்து அவற்றை களைந்திட விருப்பம் உடையவர் (அ) சமூகப் பணிகளில் அனுபவம் (அ) சட்ட அறிவு பெற்ற இரண்டு பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். |
| 3. | (உறுப்பினர்– 3) தொண்டு நிறுவனம் / சமூக செயல்பாட்டாளர் / சட்ட வல்லுநர்கள்/ சமூகப் பணி கல்வியாளர்கள் | பெண்கள் நலனுக்காக பணிபுரியும் தொண்டு நிறுவனம் பிரதிநிதியாக இரண்டு நபர்களை நியமிக்கப்பட வேண்டும்.<br>✓ இரண்டு நபர்களில் ஒருவர் பெண் உறுப்பினராக இருக்க வேண்டும்.<br>✓ குழுவில் ஒருவர் சட்ட அறிவுபெற்றவராகவும் ஒருவர் பட்டியல் வகுப்பினர் (SC)/ பட்டியல் பழங்குடியினர் (ST)/ பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பு/ சிறுபான்மையின | பெண்களுக்கான சமூக பணியில் ஈடுபட்டுள்ள தொண்டு நிறுவனம்/மகளிர் சங்கங்களை சார்ந்த அல்லது பாலியல் வன்கொடுமைகள் குறித்த விழிப்புணர்வுடைய நபர்களில் ஒருவரை நியமிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வகுப்பினராக இருத்தல் வேண்டும். | |
| 4. | (உறுப்பினர் –4) தலைவர் | மாவட்ட சமூக நல அலுவலர் | – |
| | மொத்த உறுப்பினர் | 5 நபர்கள் | 4 நபர்கள் |
| | பெண்கள் சதவீதம் | 80% | 50% |

F 2/2 M

குறிப்பு:

- உள்ளூர்/ உள்ளக குழுக்களின் பணிக்காலம் முடிவடைந்த படியால், அவற்றை சட்டத்தின் பிரிவுகளின்படி அட்டணையில் கூறியுள்ளவாறு சரியான கட்டமைப்பில் மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டும்.

<u>நிறுவனம் சாரா குழு உறுப்பினர்கள்/ தொண்டு நிறுவனங்கள் பட்டியல் தேர்வு செய்தல்</u>

பணியிடத்தில் பாலியல் குற்றங்களை களைந்திட சம்மந்தப்பட்ட துறைகள் / நிறுவனம் சாரா குழு உறுப்பினர்களை முதலில் கண்டறிந்து உரிய பட்டியலை தயார் செய்ய வேண்டும். உள்ளூர் மற்றும் உள்ளக குழுக்களை அமைத்திட, மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கு அனுப்பட்டுள்ள தொண்டு நிறுவனங்களின் பட்டியலை ஆய்வு செய்து பயன்படுத்திக் கொள்வதுடன் கூடுதல் தேவைக்கு சிறந்த சமூக செயல்பாட்டாளர், சமூகப் பணி கல்வியாளர்கள், சட்ட வல்லுனர்கள் பட்டியலையும் மாவட்ட அளவில் தயார் செய்து கொண்டு பாதுகாப்பு குழுக்கள் உருவாக்கிட தேவைப்படும் துறைகள்/நிறுவனங்களுக்கு பரிந்துரைக்க வேண்டும்.

குழுக்களின் இலக்கு எண்ணிக்கை

1. மாவட்ட அளவில் உள்ளூர் குழுவினை மாவட்ட ஆட்சியர் மேற்பார்வையில்/ அன்னார் ஒப்புதலுடன் முதலில் அமைக்க வேண்டும். (இணைப்பு: 1)
2. இரண்டாவதாக உள்ளக குழுக்களை மாவட்ட ஆட்சியர் கீழ் செயல்படும் அனைத்து அரசுத்துறை அலுவலகங்கள்/ அரசு சார்ந்த நிறுவனங்களில் அமைத்திட வேண்டும். இதற்கு அரசுத்துறைகள்/ துறை சார்ந்த நிறுவனங்கள் பட்டியலை தயார் செய்து அவற்றில் உள்ளக குழுக்கள் அமைத்திட கடிதம் அனுப்பி நடவடிக்கை வேண்டும்.
3. மூன்றாவதாக தனியார்/ அரசு சாரா நிறுவனங்களில், பள்ளிகள்/ கல்லூரிகள்/ தொழிற்சாலைகள்/ மருத்துமனைகள்/ விற்பனைக் கடைகள் / பயிற்சி நிறுவனங்கள் / தொழில் நிறுவனங்கள்/ சிறு குறு நிறுவனங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையினை வட்டார வாரியாக கண்டறிந்து தொகுத்து மாவட்ட அளவில் அவற்றின் பெயர்/ முகவரி, தொடர்பு எண்/ பணி விவரம் குறித்த விவரம் தொகுத்து, அவற்றிலும் உள்ளக குழுக்களை படிப்படியாக அமைக்க வேண்டும்.

பெண்களின்பணியிட பாதுகாப்பு தொடர்பான இச்சட்டத்தினை நடைமுறைப்படுத்திட களப்பணியாளர்களின் உதவியுடன் இலக்கு கண்டறிந்து அதன் விவரம் இணைப்பில் காணும் படிவங்களின் படி இயக்குநரகத்திற்கு தெரிவிக்க வேண்டும்.

எனவே பணியிடங்களில் பெண்கள் மீதான பாலியல் சீண்டல்களை தவிர்க்கவும் பெண்கள் பொருளாதார ரீதியில் சமூகத்திற்கு தங்கள் பங்களிப்பினை நல்கிடவும், மேற்குறியிட்ட சட்டத்தினை முறையாக செயல்படுத்திட, அனைத்து மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

06/09/2021

இயக்குநருக்காக
சமூக நல மற்றும்
மகளிர் உரிமைத் துறை

06/09/2021

## மாவட்ட ஆட்சியர் கீழ் செயல்படும் அனைத்து அரசுத்துறை அலுவலகங்கள்/ அரசு சார்ந்த நிறுவனங்களில் உள்ளக புகார் குழுவின் படிவம்

துறையின் பெயர் :

அலுவலர் பெயர்

துறையின் முகவரி :

மின்னஞ்சல் முகவரி :

தொலைபேசி எண் :

பணியாளர்கள் எண்ணிக்கை :

ஆண் :

பெண் :

மொத்தம் :

### உள்ளக புகார் குழு (ICC) Internal Complain Committee

| வ.எண் | உறுப்பினர்களின் பெயர் | பதவி | கைபேசி எண் | கையொப்பம் / தேதி |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4.. | | | | |

தலைவர் கையொப்பம்

மாவட்ட சமூகநல அலுவலத்தின் மின்னஞ்சல் முகவரி tnvlrdswo@gmail.com